**DEPOSITION OF WITNESS**

In the Court of District Munsif cum Judicial Magistrate, Cheyyur
CC Case No. 538/2025
Prosecution witnesses. PW1, LW1

| | |
|---|---|
| பெயர். திரு. தர்மன் | ஜாதி. |
| தந்தை பெயர்.திரு.வரதராஜன் | தொழில். |
| கிராமம். | சமயம். |
| தாலுக்கா. | வயது. |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 20th day of July, 2026**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது சித்தாமூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 5.1.2025 ம் தேதியில் மதுராந்தகம் மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது நிலைய ஆய்வாளர் மங்களபிரியா என்பவருடன் நானும், தலைமை காவலர் 316 ஜெயபால் என்பவரும் மதுவிலக்கு வேட்டையாக செய்யூர் எல்லைக்குட்பட்ட அம்மனூர் கிராமத்தில் கண்காணித்தபோது வெற்றிச்செல்வன் என்பவரின் கழனியில் நீதிமன்ற ஆஜர் எதிரி தியாகராஜன் என்பவர் மண்பாணையில் 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட மண்பாணையில் 5 லிட்டர் பனங்கள் இருந்தது. மேற்படி பனங்கள்ளை பகல் 8.15 மணிக்கு மேற்படி ஆய்வாளர் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். (**மேற்படி கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பிறகு மேற்படி பனங்கள்ளை சம்பவ இடத்தில் கொட்டி அழிக்கப்பட்டது. பானை உடைக்கப்பட்டது. **அழித்தல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.)** மேற்படி இரண்டு மகசருடன் என்னுடன் வந்த தலைமை காவலர் ஜெயபால் என்பவரும் கையெழுத்து செய்தார். எதிரியை கைது செய்து நிலையம் வந்து 14.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

3. நான் எனது வாக்குமூலத்தில் எத்தனை மணிக்கு எப்போது சம்பவ இடத்திற்கு சென்றேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த வாகனத்தில் புறப்பட்டு சென்றேன் என்று எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். செய்யூர் எல்லைக்குட்பட்ட எந்த எந்த பகுதிக்கு ரோந்து சென்றோம் என்ற விவரம் எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அம்மனூர் பகுதிக்கு ரோந்து சென்றோம் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன்.

4. நான் வழக்கமாக எப்போது எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு வேலைக்கு வருவேன் என்றால் 6.00 மணிக்கு வருவேன். டியூட்டி ரிஜிஸ்டர் பார்த்தால் நான் எத்தனை மணிக்கு வேலைக்கு வருவது தெரியுமா என்றால் தெரியும். அம்மனூர் பகுதியில் பொதுமக்கள் நடமாட்டம் இருக்கும் பகுதி தான் என்றால் பொதுமக்கள் நடமாட்டம் அங்கு இல்லை. எதிரியை கைது செய்யும்போது பொதுமக்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேனா என்றால் இல்லை.

5. கைப்பற்றுதல் மகசரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கைப்பற்றுதல் மகசரிலும், அழித்தல் மகசரிலும் நான் தான் கையெழுத்து போடுவேன் என்றால் சரிதான். வாடை வந்ததும் எனக்கு உடல் பாதிப்பு ஏற்பட்டு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் இல்லை.

மதுவிலக்கு ரோந்துக்கு செல்லும்போது எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் ஜெயபால் 316, நானும் ஒரே வாகனத்தில் சென்றோம், ஆய்வாளர் அவருடைய வாகனத்தில் சென்றார். மேற்படி விவரத்தை நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

6. அது மாதிரி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் சம்பவம் நடந்திருந்தால் பிரப்பட்டியை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் மேலாதிகாரியின் அழுத்தததால் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வரைபடம் மற்றும் பார்வை மகசர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் ஆய்வாளருக்கு தான் தெரியும்.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.